# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,665 — 1959 පෙබරවාරි 13 වැනි සිකුරාදා — 13.2.1959

11,665 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இலக்கம் : 62. — உப உணவுப் பொருட்கள்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவிடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மட்டக்களப்பு பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), விக்கிரமசிங்க பத்திரான ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ந் திகதியைக் கொண்ட 11,511 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 58 ம் இலக்கமுள்ள உணவு விலைக்கட்டளையின், மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக் கூடிய சில்லறை விலைகள் முதலியனவையைப் பொறுத்த மட்டில், குறித்த 1 ம், 2 ம் அட்டவணைகளில் முறையே 12 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசியைக் கொண்ட எனது விலைக் கட்டளையை இத்திகதியில் இருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் 1 ம், 2 ம் அட்டவணைகளில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக் கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த 1 ம், 2 ம் அட்டவணைகளில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைகளுக்குக் கூடுதலாக மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குள் விற்கலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2 ந் திகதியைக் கொண்ட 11,511 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஆவணி மாதம் 27 ந் திகதி பிரசுரமான உப உணவுப் பொருட்களைக் குறிக்கும் (3 ம் முதல் 8 ம் பத்திகள் வரையில் உள்ள இலக்கம் 58 ஐக்கொண்ட விலைக் கட்டளையுடன் இத்துடன் குறிப்பிட்ட 1 ம், 2 ம் அட்டவணைகளில் 2 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள பொருளைக் குறிக்கும் அப்பத்திகள் இணைக்கப்பட்டுள்ளவை போலப் பாவிக்கப்படல் வேண்டும் என்று ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு மாசி மாதம் 6 ந் திகதி முற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

டபிள்யூ. பத்திரான,
பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு),
மட்டக்களப்பு மாவட்டம்.

### அட்டவணை—1

ஆக்க்கூடிய மொத்த விற்பனை விலை அந்தர் ஒன்றுக்கு

| பத்தி 1 | பத்தி 2<br>மாசி<br>ரூ. ச. |
|---|---|
| (1) கோறளை வடக்கும், மத்தியதும், தெற்கும் ஆகிய கிராமச் சங்கத்து எல்லைகளைத் தவிர்த்து மண்முனை வட, தென்கிழக்கு, எருவில் போரதீவு, எருவூர் கோறளைப் பற்றுப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் .. .. .. | 245 50 |
| (2) எருவூர் கோறளைப் பற்றுக்குச் சேர்ந்த கோறளை வடக்கு, மத்திய தெற்கு கிராமச் சங்கத்து எல்லைக்குள் .. .. | 245 90 |
| (3) கரவாகு சம்மாந்துறைப் பற்றுப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் .. .. .. .. | 246 10 |
| (4) அக்கரைப்பற்று, பிந்தனை, வேவ்கம்பற்றுப் பிரிவு காரியாதிகாரியின் பிரிவுகளில் .. .. .. | 246 20 |
| (5) பாணமைப் பற்றுப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகள் .. .. .. .. | 246 50 |

### அட்டவணை—2

ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை இருத்தல் ஒன்றுக்கு

| பத்தி 1 | பத்தி 2<br>மாசி<br>ரூ. ச. |
|---|---|
| (1) மண்முனை வடமேற்குக் கிராமச் சங்கத்து எல்லை தவிர்த்து மண்முனை வட பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுகளில் .. | 2 46 |
| (2) மண்முனை வடமேற்கு கிராமச் சங்கத்து எல்லையும், மண்முனை தென்கிழக்கும், எருவில் போரதீவு, கரவாகு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பாணமை, எருவூர் கோறளை, பிந்தனையும் வேவ்கம் பற்றுமாகிய காரியாதிகாரியின் பிரிவுகளிலும் .. | 2 47 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக் கூடிய** விலைகள் ஆகும். இவ்விலைகளுக்கு மேல் அப்பொருளை விற்கலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. எம் என். /2–1959. உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ம் பிரிவோடு 3 (2)ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மன்னார் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), சன்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) 1958ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ம் திகதியைக் கொண்ட எம்.என் 9—1958 இலக்கமுள்ள, 1958ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ந் திகதியைக்கொண்ட 11,525 ம் இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்தவிலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறைவிலை முதலிய வற்றைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2ம், 3ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையும் 1ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாடு பற்றிய எனது விலைக் கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2ம், 3ம் பத்திகளில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தரொன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையில் 1ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட மாசிக் கருவாட்டை இந்த விலைக்குக் கூடுதலாக மன்னார் மாவட்ட எல்லைக்குள் விற்கலாகாது.

இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மாசிக்கருவாட்டையோ திருப்பி விற்பதாக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக்கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக்கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோலக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் மன்னார் மாவட்ட எல்லைக்குள் மாசிக்கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் மன்னார் மாவட்ட எல்லைக்குள் மாசிக்கருவாட்டை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த 1ம் அட்டவணையில் விவரித்துள்ள மாசிக்கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தலொன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படவேண்டுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் மன்னார் மாவட்ட எல்லைக்குள் மாசிக் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னார்க்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்றைக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாசிக் கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்பனை செய்யப்பட்ட தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இக்கட்டளையால் மாசிக் கருவாடு விற்குமிடத்து குறிப்பிட்ட அட்டவணையின் 2ம், 3ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ந் திகதி பி. ப. 3 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

### அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தரொன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை | பத்தி 3<br>சில்லறை வியாபாரியின் நிகர இருத்தலொன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| மாசிக்கருவாடு (எல்லா ரகங்களும்) | .. .. | 251 0 | 2 51 |

**குறிப்பு :** இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய விலைகளாகும்.** இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

உணவு விலைக் கட்டளை வி. 56. உப உணவுப் பொருட்கள் (மாசிக் கருவாடு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2)ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்ட வவுனியா மாவட்டத்தின் உதவி விலை க் கட்டுப்பாட்டதிகாரி, பராசசேகரம்பிள்ளை தம்பையா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 29ம் திகதியைக்கொண்ட 11,508 இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் திகதியைக் கொண்ட 50ம் இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளையில் விபரிக்கப்பட்டிருக்கும், மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலை முதலியவையைப்பொறுத்தமட்டில் விபரிக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையில் காணப்படும் விலைகளையும் 1ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாடு பற்றிய எனது விலைக் கட்டளையை இத்தகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையில் 2ம், 3ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகரஅந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்தவிற்பனையாகவும், சில்லறை வியாபாரியின் ஆகக்கூடியசில்லறை விற்பனையாகவும் நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் குறித்த விலைகளிலும் பார்க்கக் கூடுதலாக விற்றலாகாது.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத் தொகையான மாசிக் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் கட்டளையிடுகிறேன் ;

(ஆ) எத்தொகையான மாசிக்கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் கட்டளையிடுகிறேன் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய மாசிக் கருவாடு மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமை போல் கணக்கும் பார்க்கப்படவேண்டுமென கட்டளையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் வவுனியா மாவட்ட எல்லைக்குள் மாசிக்கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது எனக் கட்டளையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் வவுனியா மாவட்ட எல்லைக்குள் மாசிக் கருவாட்டை தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்து இருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த முதலாம் அட்டவணையில் விபரித்துள்ள மாசிக் கருவாட்டுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்திருத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை நிறையின்பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படமென்றும் கட்டளையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் மாசிக்கருவாட்டின் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த முதலாம் அட்டவணையின்1ம் பத்தியில் விபரிக்கப்பட்டபொருளை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளை சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற மாசிக்கருவாட்டின் தொகை (நிறையில்) ;

(இ) விற்றதொகைக்குக் கொடுக்கப்பட்டவிலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இக்கட்டளையால் மாசிக்கருவாடு விற்குமிடத்து குறிப்பிட்ட அட்டவணையின் 2ம், 3ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளை சுற்றிக் கொடுக்கும் உறைஅல்லது கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

1959ம் ஆண்டு மாசி மாதம் 9ம் திகதி மாலை 3 மணிக்கு வவுனியாவில் கையொப்பமிடப்பட்டது.

ப. தம்பையர்,
பிரதி விலைக் கட்டுப் பாட்டதிகாரி (உணவு), வவுனியா.

### முதலாம் அட்டவணை

வவுனியா தெற்கு (தமிழ்) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்பிரிவுக்கு சேர்ந்த ஆசிகுளம் வவுனியா, நொச்சிமோட்டை நெடுங்குளமும், புதுக்குளமும் வவுனியா தெற்கு (சிங்கள) பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்கு சேர்ந்த மடுக்கந்தையும் ஈரப்பெரிய குளமும்

| நம். | விபரம் | பந்தி 2<br>நிகர அந்கர் ஒன்றுக்கு ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பந்தி 3<br>நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | மாசிக்கருவாடு (எல்லா வகைகளும்) .. .. | 248 10 .. | 2 50 |

இரண்டாம் அட்டவணை

| | பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|---|
| நம் | விபரம் | முதலாம் அட்டவணையில் 2ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு மொத்த வியாபாரி நிகர அந்தர் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் விலை | முதலாம் அட்டவணையில் 3ம் பத்தியில் குறித்த விலையிலும் பார்க்க ஒரு சில்லறை வியாபாரி இருத்தல் ஒன்றுக்குச் சேர்த்து விற்கும் சில்லறை விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| 1. | வவனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச் சேர்ந்த மருதங்குளம், மருதமடு, இராசேந்தின்குளம், வவனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் (சிங்கள) பிரிவுக்குச் சேர்ந்த சூடுவேந்தபுலவு மருதமடுவைத் தவிர்ந்த உலுக்குளம் | 0 25 | 0 1 |
| 2. | வவனியா தெற்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் தமிழ் பிரிவுக்குச்சேர்ந்த பெரிய புளியங்குளம் வாகை கட்டின் ஒலுக்குளம் வர்ழைவைத்தகுளம் | | |
| | வவனியா தெற்கு இறைவரி உத்தியோகத்தர்(சிங்கள) பிரிவில் உலுக்குளம் பகுதிக்குச் சேர்ந்த மருதமடு கிராம விதானையின் பகுதி | 0 50 | 0 1 |
| 3. | வவனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த நெடுங்கேணி, மாங்குளம், ஒலுமடு கனகராயன்குளம், புளியங்குளம் | 0 50 | 0 1 |
| 4. | வவனியா வடக்கு பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த பரந்தன் மணவாளன் பட்டமுறிப்பு, தண்டுவான், கச்சிலமடுவும் ஊஞ்சல்கூட்டியும் | 0 75 | 0 2 |
| 5. | வவனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த முள்ளியவளை, தனியூற்று, முல்லைத்தீவும் வாளைமூள்ளி வாய்க்காலும் | 1 0 | 0 2 |
| 6. | வவனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த குமுள்முனை, புதுக்குடியிருப்பும் அம்பலவன் பொக்கணையும் | 1 25 | 0 2 |
| 7. | வவனியா கரைதுறைப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குச் சேர்ந்த கொக்கிளாயும் கொக்குத்தொடுவாயும் | 1 50 | 0 3 |

குறிப்பு : இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. கே. டி. 68. (கருவாடும் காய்ந்த இருலும்).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு கண்டி மாவட்டத்திற்கும் நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அலன் பேசில் சாமுவேல் நேசராஜா புள்ளநாயகம் ஆகிய நான் இக்கட்டளையால் —

(1) 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் திகதியைக் கொண்ட 11,367 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 21 ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட கே. டி. 66 ம் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) 1950 ம் ஆண்டு 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இப்பொழுது கொழும்பு நகரசபை எல்லைக்குள் கருவாட்டுக்கும் காய்ந்த இருலுக்கும் நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றை ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கப்பட்டுள்ள விலைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் அட்டவணையில் 2 ம் 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள தொகையால் கூட்டப்பட்டு முறையே கருவாட்டுக்கும் காய்ந்த இருலுக்கும் நிகரஅந்தர் ஒன்றுக்கு ஆகக் கூடிய மொத்த விலையாகவும் நிகர இருத்தல் ஒன்றுக்கு ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் நியமிக்கப்பட்டுள்ளது. முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை இரண்டாம் அட்டவணையில் முதலாம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் இந்த விலைகளுக்கு மேல் விற்கப்படாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) கருவாட்டில் அல்லது காய்ந்த இருலில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த நிகர அந்தர் தொகையில் ஒரு தடவையில் கருவாட்டை அல்லது காய்ந்த இருலை விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும்.

(ஆ) கருவாட்டில் அல்லது காய்ந்த இருலில் மொத்த நிகர அந்தர் ஒன்றுக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(4) முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கருவாட்டை அல்லது காய்ந்த இருலை வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் விற்கப்படாது.

(5) விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் தம் வசத்திலுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, அல்லது எவ்வாகனத்திலாவது முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருள்களை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருளுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(6) ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில், முதலாவது அட்டவணையில் குறிப்பிட்ட எதாவது ஒரு பொருளை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள எந்தப் பொருட்களையாவது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" என்பது அவோர்டுபோஸ் எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

(8) முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள எதாவது ஒரு பொருள் விற்கப்படுமிடத்து, குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில், அல்லது விற்கப்படும் பொருளை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, நெத்தலி, இறல் கருவாடு முதலியவை தவிர்ந்த மற்றைய எந்த மீன் கருவாடோ எவ்விதமாகவெனினும் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 10 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(10) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் கும்பளா கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 25 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(11) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் பொம்பிலி கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 8 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(12) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் நெத்தலிக் கொள்கலங்களில் எவ்விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 20 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(13) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டிருக்கும் புற ஓடற்ற இறல் கருவாடு அல்லது புற ஓடுள்ள இறல் கருவாடு கொள்கலங்களில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 15 இருத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(14) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "நிகர" என்பது மீன் கருவாட்டின் அல்லது இறல் கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

கண்டிக் கச்சேரியில் 1959 ம் ஆண்டு மாசி மாதம் 9 ம் திகதி பி. ப. 2.40 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பி. எஸ். என். புள்ளநாயகம்,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கண்டி மாவட்டமும் நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவா ஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியும்.

### முதலாம் அட்டவணை

| | | |
|---|---|---|
| அறக்குளா தலையில்லாமல் | பாரை தலையில்லாமல் | கும்பளா |
| அறக்குளா தலையுடன் | பாரை தலையுடன் | பொம்பிலி |
| கட்டா தலையில்லாமல் | கொடுவா தலையில்லாமல் | நெத்தலி |
| முழுக் கட்டா | கொடுவா தலையுடன் | ஓடற்ற இறல் கருவாடு |
| அஞ்சிலா தலையுடன் | சூரை | ஓடுள்ள இறல் கருவாடு |
| அஞ்சிலா தலையில்லாமல் | தொண்டன் | |

### இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>நிகர அந்தர் ஒன்றுக்கு கொழும்பு நகரசபை எல்லைக்குள் மொத்த வியாபாரியின் ஆகக் கூடியமொத்த விலைக்கு மேல் கூடியது | | பத்தி 3<br>நிகர இருத் ஒன்றுக்கு கொழும்பு நகரசபை எல்லைக்குள் ஆகக் கூடிய சில்லறை விலைக்கு மேல் கூடியது |
|---|---|---|---|
| | ரூ. ச. | | ரூ. ச. |
| கண்டி நகரசபை எல்லை இடங்கள் கங்கவத்தக் கோரளையும் உடுநுவர யட்டிநுவர பிரிவு அதிகாரியின் பகுதியும் | 4 00 | .. | 0 05 |
| உடப்பலாத்த, தும்பனை, ஹாரிஸ்பத்து, பாத்ததும்பற, பாத்தஹேவாஹற்ற பிரிவு அதிகாரிகளின் பகுதிகள் | 4 20 | .. | 0 05 |
| (அ) உடதும்பர, உடபுலத்கம அதிகாரிகளின் பகுதிகள் (ஆ) நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவின் வருமானக் காரியஸ்தரின் பகுதி .. .. | 4 50 | .. | 0 06 |

குறிப்பு—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை ஆகக்கூடிய விலைகள் ஆகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. கே. டி. 69. (உப உணவுப் பொருட்கள்—உருளைக் கிழங்கு)

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கண்டி மாவட்டத்திற்கும் நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அலன் பேசில் சாமுவேல் நேசராஜா புள்ளநாயகம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 7 ம் திகதி வெளிவந்த 11,350 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜூன் மாதம் 5 ம் திகதியைக் கொண்ட கே. டி. 65 என்னும் எனது உணவு விலைக்கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரியின் சில்லறை விலைகள் முதலியவற்றைப் பொறுத்த மட்டில் உருளைக்கிழங்கு பற்றிய எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இப்பொழுது கொழும்பு நகரசபை எல்லைக்குள் ஒரு நிகர அந்தருக்கு மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் ஒரு நிகர இருத்தலின் சில்லறை விலையாகவும் விதிக்கப்பட்டுள்ள விலைகள் இத்துடன் அணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள தொகையால் கூட்டப்பட்டு முறையே ஒரு நிகர அந்தரின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும் ஒரு நிகர இருத்தலின் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளது. முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள உருளைக் கிழங்கை இதனோடிருக்கும் அட்டவணையில் முதலாம் பத்தியில் குறிப்பிட்ட இடங்களில் இந்த விலைகளுக்கு மேல் விற்கப்படாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) உருளைக்கிழங்கில் எத்தொகையாவது விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த நிகர அந்தர் தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) உருளைக் கிழங்கில் மொத்த நிகர அந்தர் ஒன்றுக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்கு விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் உருளைக்கிழங்கை வேறொரு பொருளோடு கலந்து விற்கப் படாது.

(5) விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் தம் வசத்திலுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது உருளைக்கிழங்கை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் உருளைக்கிழங்குக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டும்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் உருளைக் கிழங்கை மொத்த விற்பனையாகவும் சில்லறை விற்பனையாகவும் விற்கும் ஒவ்வொருவரும் உருளைக்கிழங்கை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்:—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(உ) பொருளின் விபரங்கள்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " என்பது அவோர்டுபோஸ் எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

(8) குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்ட உருளைக் கிழங்கை வாங்குமிடத்து 2 ம், 3 ம் பத்திகளில் குறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் உருளைக்கிழங்கைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 10 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) சீனாவிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு ) 13 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(11) யப்பானிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக் கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 25 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(12) மரப்பெட்டிகளல்லாத (கிறேற்ஸுகள்) மற்றைய எவ்வித கொள்கலத்திலோ இருந்து உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படின், விற்பனை விலை ஒவ்வொரு கொள்கலத்திற்கும் மொத்த இருத்தலில் இருந்து 3 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(13) இக்கட்டளையின் பொருட்டு " நிகர " என்பது உருளைக் கிழங்கின் கழிவு அல்லது வெற்று நிறை குறைந்த மொத்த நிறையெனக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ம் திகதி பி. ப. 2.45 மணிக்குக் கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பி. எஸ். என். புள்ளநாயகம்,
பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கண்டி மாவட்டமும் நுவரேலியா மாவட்டத்தி
லுள்ள உடஹேவாஹெட்டப் பிரிவு
அதிகாரியின் பகுதியும்.

அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>நிகர அந்தர் ஒன்றுக்கு கொழும்பு நகர சபை எல்லைக்குள் மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விலைக்கு மேல் கூடியது | பத்தி 3<br>நிகர இருத்தல் ஒன்றுக்கு கொழும்பு நகரசபை எல்லைக்குள் ஆகக் கூடிய சில்லறை விலைக்கு மேல் கூடியது |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1. கண்டி நகரசபை எல்லை இடங்கள் கங்கவத்தைக் கோறளையும் உடுநுவர யடிநுவர பிரிவு அதிகாரியின் பகுதியும் | 4 00 | 0 05 |
| 2. உடப்பளாத்தை, தும்பணை, ஹாரிஸ் பத்து, பாத்தும்பரை, பாதஹேவாஹற்ற பிரிவு அதிகாரிகளின் பகுதிகள் | 4 20 | 0 05 |
| 3. (அ) உடதும்பற, உடபுளத்கம பிரிவு அதிகாரிகளின் பகுதிகள்<br>(ஆ) நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவு அதிகாரியின் பகுதி | 4 50 | 0 06 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகள் ஆகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

---

உணவு விலைக் கட்டளை இல. கெ டி 71.

**(உப உணவுப் பொருட்கள்—மாசி).**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கண்டி மாவட்டத்திற்கும், நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அலன் பேசில் சாமுவேல் நேசராஜா புள்ளைநாயகம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 7 ந் திகதி வெளிவந்த் 11,350 ம் இலக்க விசேஷ இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 5 ந் திகதியைக் கொண்ட கெடி. 65 என்னும் எனது உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரியின் சில்லறை விலைகள் முதலியவற்றைப் பொறுத்த மட்டில் மாசி பற்றிய எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்து விடுகிறேன்.

(2) 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இப்பொழுது கொழும்பு நகரசபை எல்லைக்குள் ஒரு நிகர அந்தர் மாசிக்கு மொத்த வியாபாரிகளின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும், ஒரு நிகர றுத்தல் மாசியின் சில்லறை விலையாகவும் விதிக்கப்பட்டுள்ள விலைகள் இத்துடன் அணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் 2 ம், 3 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள தொகையில் கூட்டப்பட்டு முறையே ஒரு நிகர அந்தர் மாசியின் ஆகக் கூடிய மொத்த விலையாகவும், ஒரு நிகர றுத்தல் மாசியின் ஆகக் கூடிய சில்லறை விலையாகவும் உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளது. முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாசியை இதனோடிருக்கும் அட்டவணையில் முதலாம் பத்தியில் குறிப்பிட்ட இடங்களில் இந்த விலைகளுக்கு மேல் விற்கப்படாது என ஆணையிடுகிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) மாசியை எத்தொகையையாவது விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த நிகர அந்தர் அல்லது கூடுதலாக ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) மாசியில் மொத்த நிகர அந்தர் ஒன்றுக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்துக்கு விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் மாசியை வேறொரு பொருளோடு கலந்து விற்கப்படலாகாது.

(5) விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் தம்வசத்திலுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது மாசியை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் மாசிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்கவேண்டும்.

(6) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் மாசியை மொத்த விற்பனையாகவும், சில்லறை விற்பனையாகவும் விற்கும் ஒவ்வொருவரும், மாசியை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருபவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆணையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்கு கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்தவிற்பனையா, அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இறுத்தல்" என்பது, அவோர்டுபோஸ் எடுத்தல் அளவை முறையின் பிரமாண இறுத்தல் நிறையாகக் கருதப்படும்.

(8) குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்ட மாசியை விற்குமிடத்து, இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் மாசியை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆணையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ந் திகதி பி. ப 3.25 மணிக்கு கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பி. எஸ். என். புள்ளைநாயகம்,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கண்டி மாவட்டமும், நாவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவா ஹட்டப் பிரிவு அதிகாரியின் பகுதியும்.

### அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>நிகர அந்தர் ஒன்றுக்கு கொழும்பு நகர சபை எல்லைக்குள் மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விலைக்கு மேல் கூடியது | பத்தி 3<br>நிகர றுத்தல் ஒன்றுக்கு கொழும்பு நகர சபை எல்லைக்குள் ஆகக் கூடிய சில்லறை விலைக்குமேல் கூடியது |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1. கண்டி நகரசபை எல்லை இடங்கள் கங்கவத்தைக் கோறளையும் உடநுவர யடிநுவர பிரிவு அதிகாரியின் பகுதியும் .. | 4 00 .. | 0 05 |
| 2. பாத்தஹேவாஹட்ட, பாததும்பர ஹரிஸ்பத்து, தும்பணை, உடபலாத்த பிரிவு அதிகாரிகளின் பகுதிகள் .. | 4 20 .. | 0 05 |
| 3. (அ) உடதும்பர, உடபலாத்கம பிரிவு அதிகாரிகளின் பகுதிகள்<br>(ஆ) நூவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதி | 4 50 .. | 0 06 |

குறிப்பு : (1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகள் ஆகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

(2) நிகர ஒரு அந்தருக்கு கூடுதலான அல்லது குறைவான எந்தத் தொகையான மாசியை மொத்த விற்பனையாக விற்குமிடத்து, அதற்கு கொடுக்கக் கூடிய அதிக கூடின விலையை மேலே சொல்லப்பட்ட ஒரு நிகர அந்தர் விலையிலிருந்து கணிக்கவேண்டும்.

---

விலைக் கட்டளை நம்பர் கே. டி. 70

**(அரிசி மொத்த விற்பனையும் சில்லறை விற்பனையும்).**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு கண்டி மாவட்டத்திற்கும், நூவரஎலிய மாவட்டத்திலுள்ள உடஹேவாஹெட்ட பிரிவு அதிகாரியின் பகுதிக்கும் பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), அலன் பேசில் சாமுவேல் நேசராஜா புள்ளைநாயகம் ஆகிய நான் இக்கட்டளையால் —

(1) 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 6 ந் திகதி வெளிவந்த விசேஷ இலங்கை வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு ஜுன் மாதம் 2 ம் திகதி, நம்பர் கே. டி. 64 ல் பிரசுரிக்கப்பட்ட அரிசிக்கு நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையை 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 9 ம் திகதியோடு நிராகரிக்கிறேன்.

(2) இத்துடனிருக்கும் முதலாவது அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 1 ம் அட்டவணையில் 2 ம் பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலைக்குமேல் அரிசி நிகர அந்தர் ஒன்றை 1959 ம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 9 ந் திகதியிலிருந்து விற்கப்படாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இத்துடனிருக்கும் இரண்டாவது அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிடடுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் 2 ம் பத்தியில் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய சில்லறை விலைக்குமேல் அரிசி நிகர இருத்தல் ஒன்றை; 1959 ம் ஆண்டு, பெப்ரவரி மாதம் 9 ந் திகதியிலிருந்து விற்கப்படாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) எந்தத் தொகையான அசிரியையாவது திரும்ப விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் ;

(ஆ) எந்தத்தொகையான அரிசியையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகக் கருதப்படும்;

(இ) ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த அல்லது கூடிய அரிசி மொத்தமாக விற்கப்படின், இங்கு குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையிலிருந்து தக்கவாறு வழமைபோல் கணக்குப் பார்க்கப்பட வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்;

(ஈ) இக்கட்டளையின் நோக்கத்துக்காக இருத்தல் அல்லது "இரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) அரிசியை வேறொரு பொருளோடு கலந்து ஆகக்கூடிய விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் விற்கப்படாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடுதலான விலை நியமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தம்வசத்தில், அல்லது தம்கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது அரிசியை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடுதலான விலையைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டும்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடுதலான விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் அரிசியை மொத்தமாகவும், சில்லறையாகவும், விற்கும் ஒவ்வொருவரும் அரிசியை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசியின் அளவு ;

(இ) விற்ற அரிசிக்காக செலுத்தப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா சில்லறை விற்பனையா என்பது.

(8) இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடுதலான விலைகளில் அவ்வாறு விற்கப்படும் அரிசியை சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10 ந் திகதி, பிற்பகல் 3.20 மணிக்கு கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பீ. எஸ். என். புள்ளைநாயகம்,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கண்டி மாவட்டமும் நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்ட பிரிவு அதிகாரியின் பகுதியும்.

## முதலாம் அட்டவணை

| | பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு நிகர அரிசி அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை.<br>ரூ ச. |
|---|---|---|
| | **கண்டிப் பகுதி** | |
| 1. | கண்டிப் பட்டணமும் கங்கவிட்ட கோறளையும் | 19 47 |
| | **உடுநுவர யடிநுவர** | |
| 2. | கட்டுலியத்த | 19 48 |
| 3. | கெலிஓய | 19 57 |
| 4. | பிடுனுகம, தந்துரை, மெனிக்திவலை, தவுளகள | 19 61 |
| 5. | வேஇரிய, முரதலாவ | 19 59 |
| 6. | வட்டப்பொள | 19 71 |
| 7. | கடுகண்ணுவ | 19 48 |
| 8. | ஈரியகம, பொராதனைய | 19 49 |
| 9. | பத்கொடபிடிய | 19 66 |
| 10. | பொத்தபிட்டிய | 19 61 |
| 11. | அளகொளங்கை | 19 53 |
| | **தும்பனை** | |
| 12. | கலகெதர | 19 84 |
| 13. | ஹதரலியத | 19 67 |
| | **ஹரிஸ்பத்து** | |
| 14. | அரம்பேகடை பூஜாபிட்டிகுறுகொட | 19 71 |
| 15. | ஹாதெனிய, குளுகம்மன விகுஹகும்பளை வெறல்லகம அக்குறணை | 19 66 |
| 16. | பரிகம | 19 61 |
| 17. | யட்டிவாவலை | 19 57 |
| 18. | வெலேகட | 19 61 |
| 19. | பலிபான | 19 81 |
| 20. | அலவத்துக்கொட | 19 79 |
| 21. | கல்கின்ன, அன்கும்பற | 20 10 |
| | **பாத்ததும்பற** | |
| 22. | வததேகம | 19 61 |
| 23. | தெல்தெனிய | 19 91 |
| 24. | பன்வில | 19 83 |
| 25. | மடவலை | 19 70 |
| 26. | நவயாளதென்னை, கட்டுகஸ்தோட்ட | 19 49 |
| 27. | பறணகம | 19 89 |
| 28. | உழுகங்க | 20 05 |
| 29. | கெங்கலை | 19 96 |
| 30. | திகனை | 19 87 |
| 31. | அம்பதென்னை | 19 57 |
| 32. | மெனிக்கின்னை | 19 80 |
| | **உடதும்பற** | |
| 33. | உடிஸ்பத்து | 19 92 |
| 34. | ஓறுகலை | 20 06 |
| 35. | உனஸ்கிரிய | 20 19 |
| 36. | மொரகாமுல | 20 03 |
| 37. | மாரஸ்சனைய | 20 01 |
| 38. | பத்தேகம பசார் | 20 13 |
| 39. | தலாத்துஓய | 19 80 |
| 40. | கலகா | 19 96 |
| 41. | அப்பிட்டிய | 19 75 |
| | **உடபலாத்த** | |
| 42. | கம்பளை | 19 44 |
| 43. | உளபன்னை | 19 68 |
| 44. | புசல்லாவை | 19 92 |
| 45. | உடுவலை | 20 23 |
| 46. | கழுகமுவ | 19 75 |
| 47. | முல்கம | 20 10 |
| | **உடபுளத்கம** | |
| 48. | நாவலப்பிட்டிய | 19 70 |
| 49. | ஹட்டன் | 19 87 |
| 50. | நோர்வுட் | 20 08 |
| 51. | போகொவந்தலாவ | 20 43 |
| 52. | இனிகத்தனை | 20 17 |
| 53. | மஸ்கலிய அக்கரவத்தை, நோட்டன் பிறிஜ் (ஹன்டன்னுயிஸ்) | 20 41 |

### பீ.—நுவரேலியாப் பகுதியின் உடஹேவஹட்ட பிரிவு

| | பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு நிகர அரிசி அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| 54. | பதியபலிலே | 20 27 |
| 55. | மதுரட்ட | 20 55 |
| 56. | மனக்கொலே | 20 27 |
| 57. | றிக்கிலகஸ்கொட | 20 17 |
| 58. | றசத்துங்கொட | 20 24 |
| 59. | அனுகுலங்கத்த | 20 06 |
| 60. | முதனப்பிட்டிய | 20 27 |
| 61. | கறலியட்ட | 20 38 |

### இரண்டாவது அட்டவணை

| | பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு இருத்தல் அரிசியின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை<br>சதம் |
|---|---|---|
| | **எ. கண்டிப் பகுதி** | |
| 1. | கண்டிப் பட்டணமும், கங்கவட்டக் கோறளையும் | 18 |
| | **உடுநுவற யடிநுவர** | |
| 2. | கம்புராதெனிய, கெலியப்பிட்டி, குருகுத்தளை | 18½ |
| 3. | ஆண்டியாதென்னை தோட்டம் | 18½ |
| 4. | உடு நுவரயடிநுவர பிரிவின் மற்ற எல்லா இடங்களுக்கும் | 18 |
| | **தும்பனை** | |
| 5. | களகெதரை, கலகெதிரைமடிகே | 18 |
| 6. | வாத்தாவ, மினிகமுவ, கூரகம, ஹத்தாபிட்டிய, பொல்வத்தை, கணக்கரபொள, வலிகொடபொல, அவுல்போதள, அலகல்ல, பட்டப்பொள, தெஹிதெனிய, பெலான, ரங்கமுவ, குணதாஹா, உடுவ, கள்தொள | 18½ |
| 7. | தும்பணைப் பிரிவின் மற்ற எல்லா இடங்களுக்கும் | 18½ |
| | **ஹாரிஸ்பத்துவ** | |
| 8. | நியாங்கொட, பெரகம, வள்கம, மெதவளை, மறவணுகொட, குருந்துகொள்ளை, பரிகம, வெரல்லகம, குளுகம்மன, யடிவாவளை, கொண்டதெனிய, கஹவத்தை, பனிபான, முள்ளேகம, அகுரணே, கும்புறேகம, உகுரஸ்ஸபிடி, அளகொட, மாவடபொல, தொரணுகம, ஹபுகொட, புளுகொஹொதன்னை, ஓவிஸ்ஸ, படுகொட, ஜீவனுவத்தை, பொதொட | 18 |
| 9. | ஹாரிஸ்பத்துவை பிரிவின் மற்றை எல்லா இடங்களுக்கும் | 18½ |
| | **பாததும்பற** | |
| 10. | வத்தேகம, யடிரூவன, பள்ளேகம, மனிக்கின்னை, நவயலத்தன்னை, பன்விலே, பிடியேகெதர, மடவளைமடிகே, நாபான | 18 |
| 11. | உடுரூவன, யட்டவர, ஹரிகடுவ, குண்டசாலே, மஹாவத்தை, மடுல்கொல்லே, வளள, மீகம்மன, ஹுரிகடுவமடிகே, அத்தரகல்ல—உடகம், அரத்தன்னை—உடகம, அத்தரகல்ல—பள்ளேகம, அரத்தன்னை—பள்ளேகம, பள்ளேகம, பீளவள, குண்ணேபான, தொனகமுவ, தெல்தெனிய பட்டணம், தெல்தெனிய கிராமம், வெவேகம, கறள்ளியத்தை, கும்புக்கந்துர, ரம்புக்வெல்ல, அமுனுகம, சிரிமல்வத்தை ஹுலுகங்கை, பத்தேகம, கெங்கள்ள | 18½ |
| 12. | நத்தரன்பொத்த, நாரன்பணுவ, தம்பராவ, உடுகொட, கித்தாவ, கொமகொட, கோணவலே, கும்பள்ளொலுவ | 18½ |
| 13. | வேரபிடிய, கொஸ்கம, வடபான, மஹஉஸ்ஸா, கல்பொடவத்தை | 19 |
| 14. | வெந்தருவ | 19½ |
| 15. | பாததும்பறைப் பகுதியின் மற்றைய எல்லா இடங்களுக்கும் | 19 |
| 16. | உடிஸ்பத்து பட்டணம், கப்பாளை—பள்ளேகம, கப்பாளை—உடபாகே, பொற்றல்கொட, போமுறே, வத்துலியத்தை, நுகரதன்னை | 18½ |
| 17. | அம்பாலே, துனுவில, கங்கொட, ஹாலியெல்ல, தளகுண, மகவெல, உடவெல, பள்ளேவெல | 18½ |
| 18. | வேரகம | 19 |
| 19. | மீமுரவாசம | 20½ |
| 20. | உடத்தாவ, மடுகள்ள | 19½ |
| 21. | உடதும்பறை பகுதியின் மற்றைய எல்லா இடங்களுக்கும் | 19 |
| | **பாதஹேவாஹட்ட** | |
| 22. | நெகினிவெல | 18½ |
| 23. | அம்பிட்டிய—பள்ளேகம, கிப்பொள, கொஸ்ஹின்ன, கெடவெலே, அம்பிட்டிய, உடகம | 18 |
| 24. | கலஹா, தெல்தொட, நுகலியத்தை, பூடாவத்தை, கொடமுன்ன, ஹபுதள—பள்ளேகம, ஹபுதளை—உடகம, தூள்முற, கபுலியத்தே, குருதெனிய, தன்னகும்புற, மாரஸ்ஸன, கந்தேவள | 18½ |
| 25. | பட்டியகம, உடபிடிய, வனஹபுவ, மஹமதகம, உடுவெவ | 19 |
| 26. | போபிட்டிய, களவிடிதன்னை | 19 |
| 27. | அதுள்கம, ஹேவாவிஸ்ஸ | 19½ |
| 28. | பாத்தஹேவாஹெட பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் | 18½ |

**உடபலாத்த**

| | பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு இருத்தல் அரிசியின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை<br>சதம் |
|---|---|---|
| 29. | கம்பளை, உலபனே, அட்டபாக, பள்ளேகம, கலத்தை, போலவ, நாரன்விட, கிரிந்த, வள்ளஹகொட, தெல்பிட்டிய, இங்குருவத்தை, அட்டபாகேபஜார், கம்பளைவெல, ரதமல்கடுவ, அங்கம்மன, கஹடபிட்டிய, குடமகே, ஹெரகொல, மாவதுர, லெகுந்தனிய, கிராஉள்ள, புபுரெஸ்ஸ, யடபான, பல்லேபிட்டிய, பன்விலதென்னே, களுகொமுவ, உடஹேந்தன்னே .. .. .. .. | 18 |
| 30. | அடபாகே, இகலகம .. .. .. .. .. | 19½ |
| 31. | அடபாகே உடகம .. .. .. .. .. | 18½ |
| 32. | குணுகேவில .. .. .. .. .. .. | 19 |
| 33. | தொளுவ, அலுகொல்ல, ஹிந்தகள, நியனகொல்ல, புஸ்ஸல்லாவ, படிதளாவ .. .. | 18½ |
| 34. | உடுவெல்ல .. .. .. .. .. .. | 19 |
| 35. | உடபளாத்த பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் .. .. .. | 18½ |

**உடபுளத்கம**

| | | |
|---|---|---|
| 36. | நாவலப்பிட்டி, பெனிதுவ, பெனிதுடுமுள்ள, மீபிடிய, கரஹன்துன்கள, பவ்வாகம .. .. | 18 |
| 37. | ரம்புக்பிட்டிய, பள்ளேகம, கடியல்லேன, தெநிந்த, நோர்வூட், ஹட்டன்–டிக்கோயா, ரோசல்ல, கார்பாக்ஸ், ப்ரூட்ஹில், வெலிகம்பளை .. .. .. .. | 18½ |
| 38. | கினகத்ஹேன கடவெல, மஸ்கெலிய, நோட்டன் பிரிஜ் (ஹோர்டன் ஹுயிஸ்) வடவெல, அம்பகமுவ, யடிகங்ஹுள வடக்கு, யடிகங்ஹுள தெற்கு, களுகள, பொல்பிடிய, ஹோமகம .. .. | 18½ |
| 39. | அக்கரவத்தை .. .. .. .. .. .. | 19 |
| 40. | இண்டயர்ப்ஜார் (இண்டயர் கிராமம்) .. .. .. .. .. | 19 |
| 41. | தியன்சின் .. .. .. .. .. .. | 19 |
| 42. | அப்கட், இரிவன்எலிய, பத்தன, கலலெல்தெனிய, பொகவந்தலாவ .. .. | 19 |
| 43. | ஹங்குராபிட்டிய .. .. .. .. .. | 20½ |
| 44. | உடபுளாத்தக பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் .. .. .. | 19½ |

**பீ.—நுவரேலிய பகுதியின் உடஹேவஹட பிரிவு**

| | | |
|---|---|---|
| 45. | ரிக்கில்லகஸ்கட, ஹங்குரன கெதமாலுய, மாதன்வள .. .. .. | 18½ |
| 46. | பதியபலல்ல, க்ஹடத்ந்த, அலபலதன்னே, யடிவெல்ல, முன்வத்த, உடபதிய பல்ல்ல, வெள்ளகிரிய, இதம்பிடிய, மெடிபெமிய், மானகொல, தும்பாலஹபுவ, தெனிகே, கஞூகே, வில்வள, எல்கம, தெனிபே, பொரமதுள்ள, எகிரிய, ஹப்புகஸ்தெனிய, வலுகம, தொடாங்கும்புர, கட்டுகஸ்ஹீன்ன, உனன்தென்ன, முதுனபிடிய, களஉட, உடகம, கரள்ளியத்த, இடமேலாந்த, படகொள்ள, ரகதுங்கொடை .. | 19 |
| 47. | எகலகஸ் தென்ன, உனகொல்ல, உடவெல, மதுரட, துனுகேபத்த, கெடயாபதன, இல்லகொல்ல், உடவத்த, பம்பரகம .. .. .. .. | 19 |
| 48. | வெடகேபொத .. .. .. .. .. .. | 19½ |
| 49. | உடஹேவாஹெட்ட பிரிவின் மற்றைய எல்லா இடங்களுக்கும் .. .. .. | 19½ |

குறிப்பு : (i) இவ்விலைகள் மேலே சொன்ன அரிசியை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகவும். இவ்விலைகளுக்கு மேலாக அரிசியை விற்கலாகாது.

(ii) ஒரு நிகர அந்தருக்கு கூடுதலான அல்லது குறைவான எத்தொகையான அரிசியையும் மொத்த விற்பனையாக விற்குமிடத்து, அதற்கு கொடுக்கக் கூடிய அதிக கூடின விலையை மேலே சொல்லப்பட்ட ஒரு நிகர அந்தர் அரிசியின் மொத்த விற்பனை விலையிலிருந்து கணிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது